# இலக்கிய வகைச் சொற்கள்

இலக்கிய வகையால் சொற்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. இயற்சொல்
2. திரிச்சொல்
3. திசைச்சொல்
4. வடசொல்

**இயற்சொல்:**

கற்றவர், கல்லாதவர் என அனைவருக்கும் எளிதில் பொருள் விளங்கும்படி அமைந்த சொற்கள் இயற்சொற்கள் எனப்படும்.

இயற்சொல் - இயல்பான சொல்.

எ.கா:
பறவை, பூனை, மனிதன், மாமரம், பூ

**இயற்சொல் இரு வகைப்படும்.**

1) பெயர் இயற்சொல்
2) வினை இயற்சொல்

**1) பெயர் இயற்சொல்**

எளிதில் பொருள் உணர்த்தும் பெயர்ச்சொற்கள் பெயர் இயற்சொல் எனப்படும்.
(எ.கா) காற்று, நிலவு, ஞாயிறு, பலகை

**2) வினை இயற்சொல்**

ஏளிதில் பொருள் உணருமாறு அமைந்துள்ள வினைச்சொற்கள் வினை இயற்சொல் எனப்படும்.
(எ.கா) படித்தான், தூங்கினான், வந்தான், சிரித்தான், பறந்தது, மேய்ந்தன.

**திரிசொல்:**

இயல்பு நிலையிலிருந்து மாறி, கற்றவர் மட்டுமே அறிந்து கொள்ளும் வகையில் அமைந்த சொற்களைத் திரிச்சொற்கள் என்று கூறுவர்.

| | | |
|---|---|---|
| (எ.கா) | பீலி | - மயில்தொகை |
| | உகிர் | - நகம் |
| | ஆழி | - கடல் |
| | தத்தை | - கிளி |
| | புனல் | - நீர் |
| | ஞாலம் | - உலகம் |

திரிசொல் இரு வகைப்படும்

1) பெயர்த்திரிசொல்
2) வினைத் திரிசொல்

**1) பெயர்த்திரிசொல்**

எளிதில் உணர முடியாது, கற்றவர்க்கு மட்டுமே பொருள் விளங்குமாறு அமைந்த பெயர்ச்சொல் 'பெயர்த்திரிசொல்' ஆகும்.

| | | |
|---|---|---|
| (எ.கா) | எயில் | - மதில் |
| | நல்குரவு | - வறுமை |
| | கழை | - மூங்கில் |
| | கிழமை | - உரிமை |
| | மடி | - சோம்பல் |

பெயர்த்திரிசொல் இரு வகைப்படும்.
ை. ஒரு பொருள் குறித்த பல பெயர்த்திரிசொல்
ை. பல பொருள் குறித்த ஒரு பெயர்த்திரிசொல்

**ஒரு பொருள் குறித்த பல பெயர்த்திரிசொல்**

கமலம், கஞ்சம், முண்டகம், முளரி இவை யாவும் "தாமரை" என்னும் ஒரே பொருளை உணர்த்துகின்றன. இவ்வாறு கற்றவர்க்கு மட்டுமே பொருள் விளங்குமாறு அமைத்து, ஒரே பொருளை உணர்த்தும் பல சொற்களை ஒரு பொருள் குறித்த பல பெயர்த்திரிசொல் என்று அழைக்கிறோம்.
எ.கா:
வேழம், வாரணம், கழை ஆகிய சொற்கள் "யானை" யைக் குறிக்கும்.

**பல பொருள் குறித்த ஒரு பெயர்த்திரிசொல்**

ஆவி இச்சொல் உயிர், பேய், மெல்லிய புகை ஆகிய பல சொற்களை உணர்த்துகின்றது. அரிதில் பொருள் விளங்கும் இப்பெயர்ச்சொல் பல பொருள்களைத் தருவதால் அதனைக் பல பொருள் குறித்த ஒரு பெயர்த்திரிசொல் என்று அழைக்கிறோம்.
எ.கா:
ஆவணம் - முறிச்சீட்டு, கடைத்தெரு, அடிமைத்தனம்

**2) வினைத்திரிசொல்:**

கற்றவருக்கு மட்டுமே பொருள் விளங்கும் வகையில் அமைந்த வினைச்சொல் வினைதிரிசொல் எனப்படும்.

எ.கா: வினவினான், விளித்தான், நோக்கினான்.

வினைத்திரிசொல் இரு வகைப்படும்.

ை. ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல்

ை. பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்

**ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல்**

செப்பினான், உரைத்தான்,மொழிந்தான், இயம்பினான் இவை கற்றவர்க்கு மட்டுமே விளங்கும் வகையில் அமைந்த வினைச்சொற்களாகும். எனவே இவை வினைத் திரிசொல் என வழங்கப்படும். இச்சொற்கள் அனைத்தும் ஒரு பொருளையே தருவதால் இவற்றை ஒரு பொருள் குறித்த பல வினைத் திரிசொல் என்பர்.

**பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல்**

வீசு இந்த வினைச்சொல் எறி, சிதறடி, பரவச்செய், ஆட்டு என்னும் பல பொருட்களை உணர்த்துகின்றது. இது கற்றவர்கள் மட்டுமே அறியும் சொல்லாகும். இதனைப் பல பொருள் குறித்த ஒரு வினைத் திரிசொல் ஆகும்.

**திசைச்சொல்**

வடமொழி அல்லாத பிறமொழிச் சொற்கள் அம்மொழிகளில் எவ்வெப்பொருளில் வழங்குகின்றனவோ அவ்வப் பொருளிலேயே தமிழிலும் வந்து வழங்குவதைத் திசைச் சொற்கள் என்கிறோம்.

தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள பிற பகுதிகளிலிருந்து தமிழில் வழங்கும் திசைச்சொற்கள்

- கேணி - (கிணறு)
- பெற்றம் - (பசு)
- அச்சன் - (தந்தை)
- கடிதாசி - (கடிதம்)
- தள்ளை - (தாய்)
- சாவி - (திறவு கோல்)
- எனை.அசல் - (மூலம்)
- கோர்ட் - (நீதிமன்றம்)
- இலாகா - (துறை)

**வடசொல்**

வடமொழிச் (சமஸ்கிருதம்) சொற்கள் திரிந்தும், திரியாமலும் தமிழ் மொழியில் வந்து வழங்குமானால் அவை "வடச்சொற்கள்" எனப்படும்.

கமலம், விஷம், புஷ்பம், இவை தமிழில் வந்து வழங்கினாலும் தமிழ்சொற்கள் அல்ல வடமொழிச் (சமஸ்கிருதம்) சொற்கள்.

எ.கா: கமலம் - தாமரை

விஷம் (அ) விடம் - நஞ்சு

புஷ்பம் (புட்பம்) - மலர்

அர்ச்சனை - மலரிட்டு வழிபடுதல்

சுதந்திரம் - விடுதலை

விவாகம் - திருமணம்

Whatsapp குரூபில் சேர - கிளிக் செய்யவும்

Telegram Channel ல் சேர - கிளிக் செய்யவும்